**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**CC.No.160/2023**

**Deposition of PW-6/LW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. குலோத்துங்கன் | **Age** | : | 57/2026 |
| **Father's Name** | : | திரு. ராமமூர்த்தி | **Religion** | : | இந்து |
| **Village** | : | கோம்பை | **Calling** | : | விவசாயம் |
| **Taluk** | : | உத்தமபாளையம் | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **01/07/2026.**

1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1) நான் கோம்பையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது தங்கையின் மகன் ஆவார். கடந்த 16.2.2019 ஆம் தேதி காலை சுமார் 11 மணிக்கு நான் எனது தோட்டத்திற்கு சென்றேன். அ.சா.1ன் தோட்டத்தை தாண்டிதான் எனது தோட்டத்திற்கு செல்ல வேண்டும். நான் எனது தோட்டத்திற்கு சென்றுவிட்டு திரும்பி வரும்போது அ.சா.1ன் தோட்டத்திற்கு வெளியே அவரது இருசக்கர வாகனம் மட்டும் நின்றுகொண்டு இருந்தது. அப்போது பிரித்திவிராஜன் தடுமாறி தள்ளாடி கொண்டு நடந்து வந்து கொண்டு இருந்தார் நான் உடனே அவரிடம் என்ன ஆச்சு என்று கேட்டேன்.

2) அதற்கு பிரித்திவிராஜ் பக்கத்து தோட்டத்தில் இருந்த கண்ணன் தன்னை வெட்டிவிட்டதாகவும் கண்ணனின் மனைவி கண்ணனின் அம்மா இருவரும் கல்லைக் கொண்டு தன்மீது போட்டதாகவும் கூறினார். நான் அவரது சட்டையை

கழற்றி பார்த்தபோது நெஞ்சில் வீக்கமாக இருந்தது காலில் வெட்டுப்பட்டு இருந்தது. நான் உடனே அவரை எனது இருசக்கர வாகனத்தில் உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அவரை அழைத்துச் சென்றேன். நானும் அவருடன் மருத்துவமனையில் இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

3) நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களைதான் போலீசார் விசாரித்தபோதும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் என்னை அரசு மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். எனது தோட்டத்திற்கும் ப்ரித்திவிராஜ் தோட்டத்திற்கும் எவ்வளவு இடைவெளி உள்ளது என்றால் ஒரே ஒரு இடம்தான் உள்ளது. ப்ரித்திவிராஜ் தோட்டத்தின் வழியாகத்தான் அனைவரும் சென்றுவர வேண்டும். ப்ரித்திவிராஜ் மற்றும் கண்ணன் தோட்டத்தின் வழியாக பாதை உள்ளது என்பது சம்பந்தமாக உத்தமபாளையம் நீதிமன்றத்தில் அவர்களுக்குள் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியும்.

4) ப்ரித்திவிராஜை நான் பார்த்தபோது காலை சுமார் 11 மணி இருக்கும். ப்ரித்திவிராஜ் தோட்டத்தின் முன்பாக உள்ள ரூம் அருகே பார்த்தேன். கண்ணனின் தோட்டத்திற்கு வடக்கே இரண்டு தோட்டம் தள்ளிதான் பிரிதிவிராஜின் தோட்டம் உள்ளது என்றால் இருவருக்கும் ஒரே கரைதான் உள்ளது இடையே இரண்டு தோட்டம் இல்லை. ப்ரித்திவிராஜின் காலில் ஏற்பட்டிருந்த காயம் வெட்டு காயமா சிராய்ப்பு காயமா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியவில்லை.

5) ப்ரித்திவிராஜின் நெஞ்சில் ஏற்பட்டிருந்த காயம் கன்றிப்போய் இருந்ததா என்றால் ஆமாம் சிவப்பாக இருந்ததா என்றால் ஆமாம். பிரித்திவிராஜின் பைக்கில் வைத்துதான் அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அவர் மயக்க நிலையில் இருந்தாரா என்றால் இல்லை ஓரளவு தெளிவாக இருந்தார். நாங்கள் மருத்துவமனை செல்லும் வழியில்தான் கோம்பை காவல் நிலையம் உள்ளது என்றால் சரிதான் அதை கடந்துதான் மருத்துவமனை செல்ல வேண்டும் என்றால் சரிதான்.

6) காவல் நிலையம் சென்று தகவல் சொல்லிவிட்டு சென்றோமா என்றால் இல்லை நேரடியாக மருத்துவமனைதான் சென்றோம். நாங்கள் மருத்துவமனை சென்றபிறகு எவ்வளவு நேரம் கழித்து போலீசார் வந்தார்கள் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் வந்து விசாரித்தபோது அவர்களுக்கு தகவல் ப்ரித்திவிராஜ் சொன்னாரா அல்லது நான் சொன்னேனா என்றால் நாங்கள் இருவரும் சொன்னோம். புகாரை யார் எழுதினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

7) ப்ரித்திவிராஜ் கொடுத்த புகாரில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம். இதே சம்பவத்தில் ப்ரித்திவிராஜ் மீது கண்ணன் மற்றும் அவரது மனைவியை தாக்கியதாக ஒரு வழக்கு இந்த நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் நான் கேள்விப்பட்டதுபோல் சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும் ப்ரித்திவிராஜ் எனக்கு தங்கை மகன் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M

Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.07.01 17:45:16 +0530

**Judicial Magistrate,**
**Bodinayakanur.**